# 6. இனவெழுத்துகள் அறிதல் - சுட்டு எழுத்துகள் - வினா எழுத்துகள்

புதுசு

## ஆறாம் வகுப்பு

### இன எழுத்துகள்

சில எழுத்துகளுக்கு இடையே ஒலிக்கும் முயற்சி, பிறக்கும் இடம் ஆகியவற்றில் ஒற்றுமை உண்டு. இவ்வாறு ஒற்றுமை உள்ள எழுத்துகள் இன எழுத்துகள் எனப்படும். ஆறு வல்லின மெய் எழுத்துகளுக்கும் ஆறு மெல்லின எழுத்துகளும் இன எழுத்துகள் ஆகும். சொற்களில் மெல்லின மெய் எழுத்தை அடுத்துப் பெரும்பாலும் அதன் இனமாகிய வல்லின எழுத்து வரும்.

(ங் க், ஞ் ச், ண் ட், ந் த், ம் ப், ன் ற்).

(எ.கா.)
திங்கள், மஞ்சள், மண்டபம், சந்தனம், அம்பு, தென்றல்

இடையின எழுத்துகள் ஆறும் (ய், ர், ல், வ், ழ், ள்) ஒரே இனமாகும்.

மெய்யெழுத்துகளைப் போலவே உயிர் எழுத்துகளிலும் இன எழுத்துகள் உண்டு. உயிர் எழுத்துகளில் குறிலுக்கு நெடிலும், நெடிலுக்குக் குறிலும் இன எழுத்துகள் ஆகும். **குறில் எழுத்து இல்லாத ஐ என்னும் எழுத்துக்கு இ என்பது இன எழுத்தாகும். ஔ என்னும் எழுத்துக்கு உ என்பது இன எழுத்தாகும்.** சொல்லில் உயிர் எழுத்துகள் சேர்ந்து வருவது இல்லை. அளபெடையில் மட்டும் நெடிலைத் தொடர்ந்து அதன் இனமாகிய குறில் எழுத்து சேர்ந்து வரும்.

(எ.கா.) ஓஒதல், தூஉம், தழீஇ

**தமிழ் எழுத்துகளில் ஆய்த எழுத்துக்கு மட்டுமே இன எழுத்து இல்லை.**

### TNPSC Old Questions
கட்டாயத் தமிழ்

'ஐ', 'ஔ' என்ற எழுத்துக்களின் இன எழுத்துகளைக் கண்டறிக (PSGS/2022)

அ) அ, இ
ஆ) இ, உ
இ) ஈ, ஓ
ஈ) அய், அவ்

## பயிற்சி வினாக்கள்

1. மெல்லினத்திற்கான இன எழுத்து இடம்பெறாத சொல் எது?
அ) மஞ்சள்
ஆ) வந்தான்
இ) கல்வி
ஈ) தம்பி

**விடை : இ)**

2. 'ஐ' என்னும் எழுத்துக்கு ______ என்பது இன எழுத்தாகும்.
அ) உ
ஆ) இ
இ) ஊ
ஈ) ஈ

**விடை : ஆ)**

3. 'ஔ' என்னும் எழுத்துக்கு ______ என்பது இன எழுத்தாகும்.
அ) உ
ஆ) ஏ
இ) ஒ
ஈ) ஓ

**விடை : அ)**

4. தமிழ் எழுத்துகளில் ______ எழுத்துக்கு மட்டும் இன எழுத்து இல்லை.
அ) மெய்
ஆ) உயிர்
இ) ஆய்த
ஈ) உயிர்மெய்

**விடை : இ)**

5. மெல்லினத்திற்கான இன எழுத்து இடம்பெற்ற சொல் எது?
அ) தென்றல்
ஆ) வென்றான்
இ) நன்றி
ஈ) கன்டம்

**விடை : இ)**

## சுட்டு எழுத்துகள்

அவன், இவள், அங்கு, இங்கு, அந்த, இந்த ஆகிய சொற்களைக் கவனியுங்கள். அவை ஒன்றைச் சுட்டிக் காட்டுகின்றன. இவ்வாறு சுட்டிக்காட்டுவதற்கு அச்சொற்களின் முதலில் அமைந்துள்ள அ, இ ஆகிய எழுத்துகளே காரணம் ஆகும்.

இவ்வாறு ஒன்றைச் சுட்டிக் காட்ட வரும் எழுத்துகளுக்குச் சுட்டு எழுத்துகள் என்று பெயர்.

அ, இ, உ ஆகிய மூன்று எழுத்துகளும் சுட்டு எழுத்துகள் ஆகும். ஆனால், இன்று 'உ' என்னும் எழுத்தைச் சுட்டாகப் பயன்படுத்துவது இல்லை.

**அகச்சுட்டு**

இவன், அவன், இது, அது - இச்சொற்களில் உள்ள சுட்டு எழுத்துகளை நீக்கினால் பிற எழுத்துகள் பொருள் தருவதில்லை. இவ்வாறு, சுட்டு எழுத்துகள் சொல்லின் உள்ளேயே (அகத்தே) இருந்து சுட்டுப்பொருளைத் தருவது அகச்சுட்டு எனப்படும்.

**புறச்சுட்டு**

அவ்வானம் - இம்மலை - இந்நூல் - இச்சொற்களில் உள்ள சுட்டு எழுத்துகளை நீக்கினாலும் பிற எழுத்துகள் பொருள் தரும். இவ்வாறு சுட்டு எழுத்துகள் சொல்லின் வெளியே (புறத்தே) இருந்து சுட்டுப்பொருளைத் தருவது புறச்சுட்டு எனப்படும்.

**அண்மைச்சுட்டு**

இவன், இவர், இது, இவை, இம்மரம் இவ்வீடு - இச்சொற்கள் நம் அருகில் (அண்மையில்) உள்ளவற்றைச் சுட்டுகின்றன. எனவே, இ∴து அண்மைச்சுட்டு எனப்படும். **அண்மைச்சுட்டுக்குரிய எழுத்து 'இ' ஆகும்.**

**சேய்மைச்சுட்டு**

அவள், அவர், அது, அவை, அவ்வீடு, அம்மரம் - இச்சொற்கள் தொலைவில் (சேய்மையில்) உள்ளவற்றைச் சுட்டுகின்றன. எனவே, இது சேய்மைச்சுட்டு எனப்படும். **சேய்மைச்சுட்டுக்குரிய எழுத்து 'அ' ஆகும்.**

> அருகில் உள்ளவற்றிற்கும் தொலைவில் உள்ளவற்றிற்கும் இடையில் இருப்பதைச் சுட்டிக் காட்ட 'உ' என்ற சுட்டெழுத்து அக்காலத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது
> (எ.கா.) உது, உவன்

**சுட்டுத்திரிபு**

அம்மரம், இவ்வீடு ஆகியவை புறச்சுட்டுகள் என்பதை அறிவோம். இச்சொற்களை அந்த மரம், இந்த வீடு என்றும் வழங்குகிறோம்.

அ, இ ஆகிய சுட்டு எழுத்துகள் மாற்றம் பெற்று (திரிந்து) அந்த, இந்த என வழங்குகின்றன.

இவ்வாறு, அ, இ ஆகிய சுட்டு எழுத்துகள் அந்த, இந்த எனத் திரிந்து சுட்டுப் பொருளைத் தருவது சுட்டுத்திரிபு எனப்படும்.

## வினா எழுத்துகள்

வினாப் பொருளைத் தரும் எழுத்துகளுக்கு வினா எழுத்துகள் என்று பெயர். சில வினா எழுத்துகள் சொல்லின் முதலில் இடம்பெறும். சில வினா எழுத்துகள் சொல்லின் இறுதியில் இடம்பெறும்.

எ, யா, ஆ, ஓ, ஏ ஆகிய ஐந்தும் வினா எழுத்துகள் ஆகும்.

- மொழியின் முதலில் வருபவை - எ, யா (எங்கு, யாருக்கு)
- மொழியின் இறுதியில் வருபவை - ஆ, ஓ (பேசலாமா, தெரியுமோ)
- மொழி முதலிலும் இறுதியிலும் வருபவை - ஏ (ஏன், நீதானே)

**அகவினா**

எது, யார், ஏன் இச்சொற்களில் உள்ள வினா எழுத்துகளை நீக்கினால் பிற எழுத்துகளுக்குப் பொருள் இல்லை. இவ்வாறு வினா எழுத்துகள் சொல்லின் அகத்தே இருந்து வினாப் பொருளைத் தருவது அகவினா எனப்படும்.

**புறவினா**

அவனா? வருவானோ? இச்சொற்களில் உள்ள ஆ, ஓ ஆகிய வினா எழுத்துகளை நீக்கினாலும் பிற எழுத்துகள் பொருள் தரும். இவ்வாறு வினா எழுத்துகள் சொல்லின் புறத்தே வந்து வினாப் பொருளைத் தருவது புறவினா எனப்படும்.

## புத்தகப் பயிற்சி வினா - விடைகள்

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. என் வீடு ............... உள்ளது. (அது / அங்கே)
2. தம்பி ................. வா. (இவர் / இங்கே )
3. நீர் .................. தேங்கி இருக்கிறது? (அது / எங்கே)
4. யார் ................ தெரியுமா? (அவர் / யாது)
5. உன் வீடு. ............ அமைந்துள்ளது? (எங்கே / என்ன)

விடை:

1. அங்கே
2. இங்கே
3. எங்கே
4. அவர்
5. எங்கே

**TNPSC Old Questions**
**கட்டாயத் தமிழ்**

மொழி முதலிலும் இறுதியிலும் வரும் வினா எழுத்து எது? (AOGS/2023)
அ) யா ஆ) எ இ) ஏ ஈ) ஆ

வினா எழுத்துகளைத் தேர்ந்தெடு. (VCGS/2022)
அ) எ, யா, ஆ ஆ) ஓ, ஆ, உ
இ) அ, இ, உ ஈ) அ, யா, இ

## பயிற்சி வினாக்கள்

1. சுட்டிக்காட்டப் பயன்படுவது ________ எழுத்து.
அ) சுட்டெழுத்து ஆ) வினா எழுத்து
இ) முதலெழுத்து ஈ) சார்பெழுத்து

விடை : அ)

2. சுட்டு எழுத்துகள் மொத்தம்
அ) இரண்டு ஆ) மூன்று
இ) நான்கு ஈ) ஆறு

விடை : ஆ)

3. பொருந்தாத சொல்லை தேர்வு செய்க.
அ) அந்நீர்வீழ்ச்சி ஆ) இம்மலை
இ) இவன் ஈ) இந்நூல்

விடை : இ)

4. பின்வருவனவற்றுள் அண்மைச்சுட்டு எழுத்து எது?
அ) இ ஆ) உ
இ) அ ஈ) ஆ

விடை : அ)

5. அருகில் உள்ளவற்றிற்கும் தொலைவில் உள்ளவற்றிற்கும் இடையில் இருப்பதைச் சுட்டிக் காட்ட அக்காலத்தில் பயன்படுத்தப்பட்ட சுட்டெழுத்து
அ) இ ஆ) உ
இ) அ ஈ) ஆ

விடை : ஆ)

6. இன்று ________ என்னும் எழுத்தைச் சுட்டாகப் பயன்படுத்துவது இல்லை.
அ) ஏ ஆ) அ
இ) இ ஈ) உ

விடை : ஈ)

7. வினா எழுத்துகள் மொத்தம்
அ) ஐந்து ஆ) ஆறு
இ) நான்கு ஈ) எட்டு

விடை : அ)

8. மொழியின் முதலில் வரும் வினா எழுத்துகள் எவை?
அ) ஆ, ஓ ஆ) எ, யா
இ) ஏ ஈ) எ, ஏ

விடை : ஆ)

9. மொழியின் இறுதியில் வரும் வினா எழுத்துகள் எவை?
அ) ஆ, ஓ ஆ) எ, யா
இ) ஏ ஈ) எ, ஏ

விடை : அ)

10. மொழி மொழியிலும் இறுதியிலும் வரும் வினா எழுத்து எது?
அ) ஆ ஆ) யா
இ) ஏ ஈ) எ

விடை : இ)

11. பொருந்தாத சொல்லைத் தேர்ந்தெடு
அ) எது ஆ) அவனா
இ) யார் ஈ) ஏன்

விடை : ஆ)

12. மொழியின் முதலில் வினா எழுத்து இடம்பெற்ற சொல்லைத் தேர்ந்தெடுக.
அ) பேசலாமா ஆ) நீதானே
இ) யாருக்கு ஈ) தெரியுமோ

விடை : இ)

13. தமிழ்மொழியில் கீழ்க்கண்ட எழுத்துகளில் எது சுட்டெழுத்து?
அ இ ஆ) எ
இ) ஏ ஈ) யா

விடை : அ)

## அறிந்து பயன்படுத்துவோம் : வினாச்சொற்கள்

ஏதேனும் ஒன்றை அறிந்துகொள்வதற்காக வினவப்படுவது வினாவாகும். வினா கேட்கப் பயன்படுத்தும் சொற்கள் வினாச்சொற்கள் எனப்படும். 'எது, என்ன, எங்கு, எப்படி, எத்தனை, எப்பொழுது, எவற்றை, எதற்கு, ஏன், யார், யாது, யாவை' போன்றன வினாச்சொற்கள் ஆகும்.

**சரியான வினாச்சொல்லை இட்டு நிரப்புக.**

1. நெல்லையப்பர் கோவில் ________ உள்ளது?
விடை : எங்கு

2. முதல் ஆழ்வார்கள் ________ பேர்?
விடை : எத்தனை

3. அறநெறிச்சாரம் பாடலை எழுதியவர் ________?
விடை : யார்

4. அறநெறிச்சாரம் என்பதன் பொருள் ________?
விடை : என்ன

**TNPSC Old Questions**
**கட்டாயத் தமிழ்**

சரியான வினாச்சொல்லைத் தேர்ந்தெடு : (ATOGS/2023) , (AOGS/2022)
நெல்லையப்பர் கோவில் உள்ளது?
அ) எவை ? ஆ) எது?
இ) யாது? ஈ) எங்கு?

சரியான வினாச்சொல்லைத் தேர்ந்தெடு. (DPGS/2022)
அ) ஆழ்வார்கள் எத்தனை பேர்?
ஆ) ஆழ்வார்கள் பத்து பேர்?
இ) ஆழ்வார்கள் தங்கும் இடம்?

சரியான வினாச்சொல்லைத் தேர்ந்தெடு : (DPGS/2022)
அ) அறநெறிச்சாரம் என்பதன் பொருள் என்ன?
ஆ) அறநெறிச்சாரம் அறிவுடையது?
இ) அறநெறிச்சாரம் விளக்கம் தருவது?
ஈ) அறநெறிச்சாரம் பொருள் அறிவது?

சரியான வினாச் சொல்லைத் தேர்ந்தெடு.
அறநெறிச் சாரம் பாடலை எழுதியவர் ________?
அ) எவ்வாறு ஆ) எப்படி
இ) ஏன் ஈ) யார்

சரியான வினாச்சொல்லைத் தேர்ந்தெடு (CTNGS/2024)
தொகைச் சொற்கள் ________ வகைப்படும்
அ) எத்தனை ஆ) எத்துணை
இ) என்ன ஈ) எவ்வளவு

சரியான வினாச் சொல்லைத் தேர்ந்தெடு (CTNGS/2024)
காசி நகரத்தின் பெருமையைக் கூறும் நூல் ________?
அ) எது ஆ) எவ்வது?
இ) ஏன் ஈ) எதற்கு

சரியான வினாச் சொல்லைத் தேர்ந்தெடு : (CTSE2024)
________ சொற்களைப் பேச வேண்டும்?
அ) என்ன ஆ) எப்படி
இ) எதற்கு ஈ) யாது

சரியான வினாச் சொல்லைத் தேர்ந்தெடு : (CTSE2024)
கண்டிப்பாக வழிவிட வேண்டிய வாகனங்கள் ________?
அ) யாவை? ஆ) எது?
இ) யாது? ஈ) என்ன?

சரியான வினாச் சொல்லைத் தேர்ந்தெடு : (CTSE2024)
மனிதனின் மனம் கலங்கக் காரணமாக அமைவது ________
அ) எவை? ஆ) என்ன?
இ) யார்? ஈ) யாது?

சரியான வினாச் சொல்லைத் தேர்ந்தெடு. (CTND003GS/2024)
உன் வீடு ________ அமைந்துள்ளது?
அ) எவ்விடம் ஆ) ஏன்
இ) எங்கே ஈ) யாது

சரியான வினாச் சொல்லைத் தேர்ந்தெடு. (CTND003GS/2024)
நாயன்மார்கள் ________ பேர்?
அ) என்ன ஆ) ஏன்
இ) எத்தனை ஈ) எப்படி

சரியான வினாச்சொல்லை தேர்ந்தெடு (PCTS/2024)
நிலங்களை ________ வகையாக பிரித்தனர்?
அ) எப்படி? ஆ) என்ன?
இ) எத்தனை? ஈ) எவ்வாறு?

சரியான வினாச் சொல்லை தேர்ந்தெடு (PCTS/2024)
கொங்கு நாட்டில் பாயும் ஆறுகள் ________?
அ) எப்படி? ஆ) யார்?
இ) எவ்வாறு? ஈ) யாவை?

சரியான வினாச்சொல்லை தேர்ந்தெடு (PCTS/2024)
செப்புத் திருமேனிகளின் பொற்காலம் ________?
அ) எது? ஆ) எப்படி?
இ) எவ்வாறு? ஈ) என்ன?
உ) விடை தெரியவில்லை

சரியான வினாச்சொல்லைத் தேர்ந்தெடு. (AAOGS/2024)
கேலிச் சித்திரம் என்றால் ________?
அ) யாவை ஆ) என்ன
இ) ஏன் ஈ) எப்படி

சரியான வினாச்சொல்லைத் தேர்ந்தெடு. (AAOGS/2024), (RAMGS/2023)
முதல் ஆழ்வார்கள் ________ பேர்?
அ) எங்கு ஆ) எப்படி
இ) என்ன ஈ) எத்தனை

சரியான வினாச் சொல்லைத் தேர்ந்தெடு: (CASEGS/2024)
"கூவல்" என்று அழைக்கப்படுவது
அ) எது ஆ) எதனால்
இ) எதற்கு ஈ) எவை

சரியான வினாச் சொல்லை தேர்ந்தெடு (CASEGS/2024)
பறவைகள் ____ ல் பறந்து செல்கின்றன.
அ) எங்கு ஆ) எப்படி
இ) எப்பொழுது ஈ) என்ன

சரியான வினாச் சொல்லைத் தேர்ந்தெடு. (HSGS/2024)
பகுபத உறுப்புகள் ________ வகைப்படும்.
அ) எத்தனை ஆ) எவற்றை
இ) எவ்வாறு ஈ) எப்படி

சரியான வினாச்சொல்லை தேர்ந்தெடு. (EOIGS/2024)
திருக்குறளை இயற்றியவர் ______
அ) யார்? ஆ) எவ்வது?
இ) யாவர்? ஈ) எப்படி?

சரியான வினாச் சொல்லைத் தேர்ந்தெடு. (EOIGS/2024)
எறும்பு பாடுபடுவது ______

அ) எதற்காக?
ஆ) ஏன்?
இ) எப்படி?
ஈ) என்ன?

சரியான வினாச் சொல்லைத் தேர்ந்தெடுத்து நிறைவு செய்க : (CEGS/2024)
மதிப்புக் கூட்டுதல் என்றால்__________.
அ) எது?
ஆ) என்ன?
இ) யார்?
ஈ) ஏன்?

சரியான வினாச்சொல்லைத் தேர்ந்தெடு : (CEGS/2024)
பெயர்ச்சொல் __________ வகைப்படும்?
அ) எத்துணை
ஆ) எத்தனை
இ) ஏன்
ஈ) என்ன

சரியான வினாச் சொல்லைத் தேர்ந்தெடு : (CEGS/2024)
அறநெறிச்சாரம் என்பதன் பொருள் ?.
அ) எப்படி
ஆ) எவ்வாறு
இ) எதற்கு
ஈ) என்ன

சரியான வினாச் சொல்லைத் தேர்ந்தெடு. (MIGS/2023)
நல்ல நூலின் இயல்புகளாக நீங்கள் கருதுவன
அ) யாது
ஆ) எது
இ) எவை
ஈ) யாவை

சரியான வினாச் சொல்லைத் தேர்ந்தெடு. (MIGS/2023)
கிழவனும் கடலும் கதையின் நாயகன்
அ) என்ன
ஆ) எது
இ) யார்
ஈ) எப்படி

சரியான வினாச் சொல்லைத் தேர்ந்தெடு : (JADLGS/23)
உயிருள்ள உடல் __________.
அ) எவை
ஆ) யாவை
இ) எது
ஈ) யாது

சரியான வினாச் சொல்லைத் தேர்ந்தெடு : (JADLGS/23)
தமிழ் மொழி மரபு பாடலின் ஆசிரியர் __________.
அ) என்ன
ஆ) யார்
இ) எது
ஈ) எங்கு

சரியான வினாச் சொல்லைத் தேர்ந்தெடு. (RAMGS/2023)
அந்தாதி என்றால் __________?
அ) எது
ஆ) என்ன
இ) எவை
ஈ) யாது

---

பழசு

## ஆறாம் வகுப்பு

## இலக்கணமும் மொழித்திறனும்

### எழுத்துகளும் மனிதர்களும்

மனிதர்களைப்போலத்தான் எழுத்துகளும். அவற்றுக்குள் நட்பும் உண்டு; இனமும் உண்டு.

'ங்' என்னும் எழுத்துக்குப் பின்னால் 'க' இன எழுத்தே வரும். 'ங்' 'க' இரண்டும் நண்பர்கள். (எ.கா.) சிங்கம், தங்கை.

அதேபோல் 'ஞ்' 'ச' இரண்டும் நண்பர்கள். இவ்விரண்டும் சேர்ந்தே வரும். (எ.கா.) மஞ்சள், அஞ்சாதே.

ண்ட, ந்த, ம்ப, ன்ற - எழுத்துகளும் நண்பர்கள். பெரும்பாலும் இவை சேர்ந்தே வரும். (எ.கா.) பண்டம், பந்தல், கம்பன், தென்றல்.

(நட்பு எழுத்துகளை இன எழுத்துகள் என இலக்கணம் கூறுகிறது)

## ஒவ்வோர் எழுத்துக்கும் ஒரு பணி

**அ, இ**

அவன், அவள், அவர், இவன், இவள், இவர், அது, இது, அவை, இவை என்னும் சொற்கள், குறிப்பிட்ட மனிதரையோ பொருளையோ சுட்டிக்காட்ட உதவுகின்றன. இப்படிச் சுட்டிச்சொல்ல உதவும் எழுத்துகள் இரண்டு அவை அ, இ.

இவற்றைச் சுட்டெழுத்துகள் என்கிறோம். பழங்காலத்தில் 'உ' என்பதும் சுட்டெழுத்துதான். 'உ' எழுத்து, பல பணிகளைச் செய்தது.

உதுக்காண் என்றால், 'சற்றுத் தொலைவில் பார்' என்பது பொருள்.

உப்பக்கம் என்றால், 'முதுகுப்பக்கம்' என்பது பொருள்.

உம்பர் என்றால், 'மேலே' என்பது பொருள்.

இப்பொழுது, சுட்டிச்சொல்ல நாம் உ எழுத்தைப் பயன்படுத்துவது இல்லை.

அவன், இவன், அது, இது எனச் சுட்டுவது ஒருமுறை. எ.கா. அப்பையன், இப்பெண், இவ்வீடு.

அவன். அவள் என்னும் சுட்டுச்சொற்கள் ஆணா, பெண்ணா என்பதனையும் சுட்டிச் சொல்லிவிடுகின்றன.

அ, இ சுட்டெழுத்துகள் தனியே நின்று சுட்டும்போது, ஆண் பெண் அனைவரையும் பொதுவாகச் சுட்டுகின்றன. அது, இது, அந்த, இந்த, அங்கு இங்கு என்னும் சுட்டுச்சொற்களே இன்று பெருவழக்காகிவிட்டன.
அந்தப்பக்கம்
இந்தவீடு

**எ, யா, ஆ, ஓ, ஏ.**

அவன் செய்தான்.
அவனா செய்தான்.

முதல் தொடர், ஒரு செய்தி மட்டுமே.
இரண்டாவது தொடர் ஒரு வினாவை எழுப்புகிறது.
செய்தியை வினா ஆக்கிய எழுத்து ஆ.

நாம் ஏராளமாய்க் கேள்விகளைக் கேட்க 'ஆ' உதவுகிறது.
நீயா? நானா?
இன்று பள்ளியா? விடுமுறையா?

வினா எழுப்புவதற்கு வேறுசில எழுத்துகளும் உள்ளன.
அவை: எ, ஏ, யா, ஓ.
விடை என்ன?
ஏன் வந்தாய்?
யார் அங்கே?
நீயோ செய்தாய்?

## 'ஏ' எழுத்துக்கு இன்னுமொரு பணி

'ஏ' எழுத்து, வினா கேட்க மட்டும் பயன்படுவது இல்லை. அழுத்தம் கொடுத்துச் சொல்லவும் பயன்படுகிறது.

அவன் செய்தான்.
அவனே செய்தான்.

இரண்டாவது சொற்றொடரில் அழுத்தம் ஏற்படக் காரணமானது, 'ஏ'.
சீதையே சிறந்தவள்.
உணவே மருந்து.

இப்பொழுது, 'ஏ' க்கு மாற்றாகத் 'தான்' பயன்படுத்தும் வழக்கமும் இருக்கிறது.

அவன்தான் முதலில் வருவான்.
*சீதை*தான் சிறந்தவள்.

**TNPSC Old Questions**
**பொதுத்தமிழ்**

சொல்லுக்கு அழுத்தம் தரும் உயிரெழுத்து எது? (G2AT16)

| | |
|---|---|
| அ) அ | ஆ) ஊ |
| இ) ஐ | ஈ) ஏ |